**பிங்கிரிய பிரதேச சபை 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிங்கிரிய பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிங்கிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 810,000 பெறுமதியான 03 வாகனங்கள் கணக்கீடு செய்யப்படாமையால் அப் பெறுமானத்தினால் நன்கொடை வருமானம் மற்றும் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களைக் கையளிக்கும் திகதி வரையில் இந்த 03 வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி சபைக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. இந்த 03 வாகனங்கள் தொடர்பாக மதிப்பீடு 2022/03/01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு அப்பெறுமதி 2022.04.05 ஆம் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததாக அறியத் தருகிறேன். | சபைக்குரிய நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காகப் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 62,593,747 | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமானத்தினால் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 8,209,235 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,265,225 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 4,944,010 ஆல் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் 03 செலவின விடயங்களின் கீழ் கடன்கொடுத்தோர் ரூபா 4,787,152 கூடுதலாக காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இக்குறைபாட்டை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொரோனா தொற்று காரணமாக அறவிடப்பட வேண்டிய கேள்வி வாடகை வருமானம் ரூபா 1,082,221 மற்றும் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 247,447 தொகை கணக்கு களிலிருந்து அகற்றுவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்காமையால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் செலவினம் அப் பெறுமானத்தினால் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 10,348,736 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,391,066 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையால் 2021 ஆம் ஆண்டின் போது 15 அலுவலக மேசைகளும் 20 கதிரைகளும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.2 பிரிவின் பிரகாரம் விதந்துரைகள் தயாரிக்கப்படாமலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமலும் 1152 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச் சீட்டின் மூலம் முறையற்ற விதத்தில் ரூபா 641,750 தொகை செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் போது நிறுவனமொன்று சமர்ப்பித்திருந்த விலை விபரங்களின் பிரகாரம் 02 வருட உத்தரவாதத்துடன் கதிரையொன்றின் விலை ரூபா 11,900 ஆக இருந்ததுடன் மற்றுமொரு நிறுவனத்தினால் உத்தரவாத காலமின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்த கதிரையொன்றின் விலை ரூபா 21,850 பெறுமதிக்கு 20 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 199,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2021 திசெம்பர் 13 ஆம் திகதி பௌதீகப் பரிசோதனையின் போது சில கதிரைகளில் சக்கரங்கள் கழன்று இருந்ததுடன் கதிரைகளை தேவையான அளவு உயர்த்த அளவில் தயாரிக்கப்படாது இருந்ததுடன் அமரும் போது மெதுமெதுவாக கீழே செல்வதாகவும் கதிரைகளின் உற்பத்தி நிறுவனம் தொடர்பான விபரங்கள் இல்லாமல் இருந்ததுடன் உத்தரவாத காலம் இல்லாமையால் அவற்றைத் திருத்தம் செய்வதற்கு முடியாது இருந்தது. | திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | கொள்வனவு செய்த நிறுவனத்தினைக் கொண்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 திசெம்பர் 06 ஆம் திகதி பௌதீக களஞ்சிய பரிசோதனையின் போது ரூபா 132,970 கூட்டுப் பெறுமதியான ஆயுர்வேத மருந்து இருப்புக்கள் காலாவதியாகி இருந்தன. | பிரதேச சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை மூடப்பட்டதால் களஞ்சியத்தினுள் வைக்கப்பட்டிருந்த இருப்புக்களை மீண்டும் பயன்படுத்த முடியாதிருந்தது. | மருந்துப் காலாவதியாகுவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் காலாவதியான இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) பிங்கிரிய முகலங்கேனவில் அமைந்துள்ள பழைய நூலகக் காணியில் தென்பகுதியில் உள்ள 20 பேர்ச் அளவிலான பகுதி 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 240,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கும் போது கேள்வி நடைமுறை அல்லது விலை கோரல் கோரப்படாமல் இருந்ததுடன் குத்தகை உரித்து. ஓராண்டுக்கு வழங்கப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருந்த போதும் 2021 திசெம்பர் 13 ஆம் திகதி கணக்காய்வு பௌதீகப் பரிசோதனையின் போது அவ்விடத்தில் சிமெந்தைக் கொண்டு நிரந்தர நிர்மாணம் ஒன்று மேற்கொள்ளப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்த அத்துமீறிய நிர்மாணத்தை அகற்றுமாறு 2021 திசெம்பர் 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதும் அந்நிர்மாணத்தை அகற்றுவதற்கு அல்லது சபையால் குத்தகை உடன்படிக்கை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குத்தகைக்கு வழங்கிய ஆதனங்கள் தொடர்பாக உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |